# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1956/SCIC/2024**

திரு S. செல்லமுத்து

மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ....... பொதுஅதிகார அமைப்பு
காவல் கண்காணிப்பாளர்
அலுவலகம்,
தலைமையிடம், காஞ்சிபுரம் 631 501

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 20.10.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 29.11.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 26.12.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 18.01.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 14.02.2024 |
| 6. | அதன்பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 22.09.2025 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 16.10.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம், காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 20.10.2023 தேதியிட்டு அனுப்பிய மனுவில் 01.08.2023 தேதியிட்ட தனது மனுவின் தற்போதைய நிலவரம், முதல் தகவல் அறிக்கை பதிவு எண் மற்றும் தேதிவிவரம், மோசடி மற்றும்

போலிபத்திரப்பதிவு செய்த சார்பதிவாளர், ஸ்ரீபெரும்புதூர் மீது FIR பதிவு செய்யப்பட்டிருந்தால் அதன் விவரம் என்பது போன்ற தகவல்களை 10 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திரு சரவணன், காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு, காஞ்சிபுரம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்

3. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரருக்கு 29.11.2023, 18.01.2024 மற்றும் 22.09.2025 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரால் 29.11.2023 தேதியிட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களில் முதல் தகவல் அறிக்கை ஏதும் பதிவு செய்யப்படவில்லையென்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மனுதாரரின் மனு மீது மாவட்ட குற்றப்பிரிவில் விசாரணை மேற்கொண்டு, எதிர்மனுதாரர் மீது மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண்.11/2024 u/s 420ன் படி 04.10.2024 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு, இவ்வழக்கில் எதிர் மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜாமீன் பெற்றுள்ளதாகவும், இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கை தயார் செய்யப்பட்டு, 26.11.2025 அன்று LTN2020003970C202500010-ன்படி e-filling செய்யப்பட்டு, "வழக்கானது நீதிமன்ற விசாரணைக்கு எடுக்கும்பொருட்டு நீதிமன்ற நிலுவையில் உள்ளது" என்று தெரிவித்து, ஒரு விரிவான அறிக்கையினை பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், இந்நிகழ்வு தொடர்பாக ஒரு சிவில் வழக்கும், ஒரு குற்றவியல் வழக்கும் நீதிமன்றத்தில் விசாரணைக்காக நிலுவையில் உள்ளது என்றும், அதுகுறித்த தகவல் ஏற்கனவே மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் ஆணையத்தின் முன் விசாரணையின்போது தெரிவித்தார்.

6. இந்நிகழ்வில் மனுதாரர் வழக்கு தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது தெளிவாகிறது. அதனடிப்படையில் மனுதாரர் உரிய பொது அதிகார அமைப்பினை அணுகி தனது கோரிக்கை குறித்து நிவாரணம் பெற்றுக்கொள்ளுமாறு ஆணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது. **இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1956/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
காவல் கண்காணிப்பாளர்
அலுவலகம்,
தலைமையிடம், காஞ்சிபுரம் 631 501

**மனுதாரர்**

திரு S. செல்லமுத்து,
த/பெ சுப்பன்,
எண்.21, 2வது மாடி, வேலவன் நகர்,
1வது தெரு, கொளத்தூர்,
சென்னை 600 099

TK/PS